தலைமையிட சிறைத்துறைத் துணைத்தலைவரின் செயல்முறை ஆணைகள், சென்னை.8
முன்னிலை—திரு.ஆ.முருகேசன், எம்.ஏ., எம்.எல்., எம்.பி.ஏ.,

எண்.5872/இ.எஸ்.1/2013 நாள்.04.11.2020

பொருள்: சிறைகள் மற்றும் சீர்திருத்தப்பணிகள் துறை – காவல்துறை இயக்குநர்/ தலைமை இயக்குநர், சிறைகள் மற்றும் சீர்திருத்தப்பணிகள் அலுவலகம், சென்னை—8ல் தட்டச்சராகப் பணிபுரியும் திருமதி.அ.லட்சுமி, என்பவர் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய குழு மூலம் நேரடி நியமன அடிப்படையில் தட்டச்சராகப் பணி நியமனம் செய்யப்பட்டது – தகுதிகாண் பருவம் விளம்பல் செய்வது – தொடர்பாக.

பார்வை:
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் கடித எண்.5906/பிஎஸ்டி—எப்/2014, நாள்.12.12.2014.
2. இவ்வலுவலகக் குறிப்பாணை எண்.5872/இஎஸ்.1/2013, நாள்.31.12.2014.
3. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் கடித எண்.6852/பிஎஸ்டி—ஆர்எப்/2015, நாள்.17.02.2017.
4. தமிழ்நாடு மாநில கூர்நோக்கு குழு—III செயல்முறை ஆணை எண்.9555/CV-6/2015-9, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள்.17.02.2020.
5. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்.5872/ இஎஸ்.1/2013, நாள்.03.08.2020.
6. இவ்வலுவலகக் கடித எண்.5872/இஎஸ்.1/2013, நாள்.26.08.2020.
7. அரசுக் கடித எண்.32999/சிறை.2020—1, உள் (சிறை.2) துறை, நாள்.17.10.2020.

******

திருமதி.அ.லட்சுமி, என்பவர் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட 2013—2014 ஆண்டிற்கான தொகுதி 4—ற்கான தேர்வில் தேர்ச்சி பெற்று 12.01.2015 அன்று முற்பகல் புழல்—2, மத்திய சிறையில் தட்டச்சராகப் பணியில் சேர்ந்தார். தற்போது காவல்துறை இயக்குநர்/தலைமை இயக்குநர், சிறைகள் மற்றும் சீர்திருத்தப்பணிகள் அலுவலத்தில் தட்டச்சராகப் பணிபுரிந்து வருகிறார். திருமதி.அ.லட்சுமி என்பவர் **"இந்து காட்டுநாயக்கன்"** வகுப்பைச் சார்ந்தவர். பார்வை 1ல் காணும் தேர்வாணையக் கடிதத்தில் மேற்கண்ட பணியாளரது சாதிச்சான்றிதழின் மெய்த்தன்மை குறித்த அறிக்கை மாநில கூர்நோக்கு குழுவிடமிருந்து பெறப்பட்ட பின்னரே அன்னாரது பணியினை வரன்முறைப்படுத்தப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.

2) பார்வை 4ல் காணும் செயல்முறை ஆணையின்படி, திருமதி.அ.லட்சமி, தட்டச்சர் என்பவரது **"இந்து காட்டுநாயக்கன்"** சாதிச்சான்றிதழ் குறித்து உண்மைத் தன்மை அறிக்கை பெறப்பட்டது. அதனைத் தொடர்ந்து பார்வை 5ல் காணும் இவ்வலுவலக செயல்முறை

ஆணையின்படி திருமதி.அ.லட்சுமி, என்பவர் பணியில் சேர்ந்த நாளான 12.01.2015 முதல் தட்டச்சர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

3) இவரது பணி வரன்முறை செய்யப்பட்டதும், இவர் தொடர் மூன்றாண்டு பணிக்காலத்தில், இரண்டாண்டு காலத்திற்கு தகுதிகாண் பருவத்தில் வைத்து ஆணை பிறப்பிக்கப்பட்டது. இவர், தகுதிகாண் பருவ காலத்திற்குள் கீழ்க்காணும் தேர்வுகளில் தேர்ச்சி பெறுதல் வேண்டும்.

(i) Tamil Nadu Government Office Manual Test

(ii) Certificate course in Computer on Office Automation awarded by the Directorate of Technical Education.

4) தமிழ்நாடு அமைச்சுப் பணி விதிகள் இணைப்பு V – item 5A-ன்படி 22.07.2008 அன்று அல்லது அதற்குப் பிறகு தட்டச்சராகப் பணிநியமனம் செய்யப்படும் நபர் தனது தகுதிகாண் பருவக் காலத்திற்குள் (அல்லது) பணிநியமனம் செய்யப்பட்ட இரண்டு ஆண்டுகளுக்குள் தொழில்நுட்ப கல்வி துறையால் நடத்தப்படும் "Certificate course in Computer on Office Automation" தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

5) திருமதி.அ.லட்சுமி, தட்டச்சர் என்பவர் பணியில் சேர்ந்த இரண்டு ஆண்டுகளுக்குள் மேற்கண்ட தேர்வுகளை கீழ்க்கண்டவாறு தேர்ச்சி பெற்றுள்ளார்.

| | |
|---|---|
| Tamil Nadu Government Office Manual Test | Test passed on December, 2016 as per Bulletin No.06, dated.07.03.2017 (Registration No.019368) |
| Certificate course in Computer on Office Automation | "Certificate Course in Computer on Office Automation" conducted by the Directorate of Technical Education passed in January, 2016 (Register No.35409) |

6) திருமதி.அ.லட்சுமி, தட்டச்சர் என்பவர் பணியில் சேர்ந்த இரண்டு ஆண்டுகளுக்குள் எவ்வித விடுப்பும் துய்க்கவில்லை. மேலும், இவர் தகுதிகாண் பருவ காலத்திற்குள் பத்தி எண்.3ல் தெரிவிக்கப்பட்டுள்ள தேர்வுகளில் தேர்ச்சி பெற்றுள்ளார். எனவே, இவர் 11.01.2017 பிற்பகல் தகுதிகாண் பருவத்தினை திருப்திகரமாக நிறைவு செய்திருக்க வேண்டும். ஆனால், பணியாளரது சாதிச்சான்றிதழின் மெய்த்தன்மை குறித்த அறிக்கை 5 ஆண்டுகள் கடந்த பின்னர் தாமதமாக பெறப்பட்டதால், மேற்கண்ட பணியாளருக்கு தகுதிகாண் பருவம் விளம்பல் செய்வது தொடர்பாக பார்வை 6ல் காணும் இவ்வலுவலகக் கடிதம் மூலம் அரசிடம் தெளிவுரை கோரப்பட்டது. பார்வை 7ல் காணும் அரசு கடிதத்தில் தனியரின் பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் விளம்பிட நிருவாக காரணங்களால் காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்பதாலும், தனியர் தகுதிகாண் பருவத்தினை தொடர்ச்சியான மூன்றாண்டு காலத்திற்குள்ளான ஈராண்டு காலத்திற்குள் நிறைவு செய்ய முழுத் தகுதியினைப் பெற்றுள்ளதால், தமிழ்நாடு அமைச்சுப் பணிக்கான சிறப்பு விதிகளில் விதி 32–ன்படி தனியர் தட்டச்சர் பதவியில் ஈராண்டு பணிக்காலத்தினை நிறைவு செய்த நாளான 11.01.2017 பிற்பகல் தனியர் தகுதிகாண் பருவத்தினை நிறைவு செய்ததாக நியமன அலுவலரே உரிய ஆணை வெளியிடலாம் என அரசால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

7) எனவே, பணியாளரது தகுதிகாண் பருவம் கீழ்க்கண்டவாறு விளம்பல் செய்யப்படுகிறது.

பணியில் சேர்ந்த நாள்.12.01.2015 முற்பகல்

+2 வருடம்

---------------

11.01.2017 பிற்பகல்

---------------

8) தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 30, 32 மற்றும் 35–ன் படி, இவர் தனது தகுதி காண்பருவத்தினை 11.01.2017 அன்று பிற்பகல் திருப்திகரமாக முடித்ததாகக் கருதி ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

ஆ.முருகேசன்
சிறைத்துறைத் துணைத்தலைவர்
தலைமையிடம் (பொ)

பெறுநர்

திருமதி.அ.லட்சுமி, தட்டச்சர், தலைமை அலுவலகம்.

நகல் – சிபி.3, உதவியாளர், தலைமை அலுவலகம் (நடப்பு எண்ணில்)
(நிலுவைத் தொகையினை பெற்று வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்)

நகல் – சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-8

நகல் – உதவி கணக்கு அலுவலர், தலைமை அலுவலகம், சென்னை-8

நகல் – இடபிள்யூ.2, உதவியாளர், தலைமை அலுவலகம் (நடப்பு எண்ணில்)
(விடுப்பு மற்றும் காலமுறை ஊதிய உயர்வு வழங்குதல் குறித்தான விவரங்களை அன்னாரது பணிப்பதிவேட்டில் முறையாக பதிவு செய்திட கேட்டுக் கொள்ளப்படுகிறார்)

நகல் - திரு.டி.கோபாலகிருஷ்ணன், தட்டச்சர், (IFHRMS) தலைமை அலுவலகம்
(IFHRMSல் பதிவு செய்யும் பொருட்டு)

நகல் – இஎஸ் பிரிவு கண்காணிப்பாளர்/ இஎஸ்.1 இருப்புக் கோப்பு.

நகல் – பணிப்பதிவேடு

ஆணைப்படி /அனுப்பப்படுகிறது

4/11/2020
கண்காணிப்பாளர்

1/8

4.11.20